**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 142/2024 PW.1**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பழனியப்பன் | த–பெ | சுப்பையா |
| ஊர்: | : | | சமயம்: | |
| வயது: | : | 44 | வட்டம்: | |
| தொழில்: | : | தனலெட்சுமி சீனிவாசன் சீட் கம்பெனி, Divisional Manager. | மாவட்டம் | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2024

---

**13.11.2024**

முதல் விசாரணை:

**1)** நான் இவ்வழக்கின் புகார்தாரர் தரப்பு ஏஜென்ட் ஆவேன். நான் எனது தரப்பு சாட்சியத்தை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் இருப்பது எனது கையொப்பம் தான். கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்

புகார்தாரர் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட **அங்கீகார கடிதம் நகல் ம.சா.ஆ.1 (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது ) ஆகும்.** கடந்த 04.06.2024 ம் தேதியிட்ட இந்தியன் வங்கி, காரைக்குடி கிளை, **காசோலை (காசோலை எண் 353625 அசல் ம.சா.ஆ.2)** ஆகும். கடந்த 05.06.2024 அன்று ம.சா.ஆ.2 காசோலை போதிய தொகை இல்லை என்ற காரணத்திற்காக திருப்பப்பட்ட **குறிப்பு சீட்டின் அசல் ம.சா.ஆ.3 ஆகும்.** கடந்த 24.06.2024–ம் தேதியன்று இது சம்பந்தமாக எதிரிக்கு அனுப்பப்பட்ட **வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் அஞ்சலக ரசீதுடன்**

**ம.சா.ஆ 4 ஆகும்**. மேற்படி ம.சா.ஆ.4 அறிவிப்பை எதிரி கடந்த 25.06.2024 அன்று பெற்றுக்கொண்டதற்கான **அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் ம.சா.ஆ.5)** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

**குறுக்குவிசாரணை. எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.<br><br>( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா, B.Sc., B.L., (Hon's))<br>விரைவுநீதிபதி, காரைக்குடி. |